**SC NO.9/2013 Date:24.01.2025**

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் ), காஞ்சிபுரம் (பக்கம் )

சாட்சியாகிய திரு.கோவிந்தராஜ் என்ற **Pw6** நபரின் வாக்குமூலம் (**1876**ம் ஆண்டின் **10** விதியின் **Tr.A.Pachaiyappan,** இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம்

செய்யப்படுகிறது.

பெயர் - திரு. கோவிந்தராஜ்

த/பெ, - திரு. முருகேசன்

.வயது - **55**

தொழில் - விவசாயம்

முதல் விசாரணை:

நான் காஞ்சிபுரம் வட்டம் வெள்ளை குளம் கிராம்தில் வசித்து வருகிறேன் விவசாய வேலை செய்து வருகிறேன். கிருஷ்ணன் என்பவர் கொலை முயற்சி சம்பந்தமாக தற்போது சாட்சி சொல்கிறேன். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி நீதிமன்ற அனுமதியுடன் மீண்டும் அரசு தரப்பு குறுக்குவிசாரணை )

கடந்த **7.8.2009** காலை சுமார் **10.30** மணிக்கு எனது சகோதரர் கிருஷ்ணன் என்பவர் தூசி காவல்நிலையத்தில் கையொப்பம் போட்டுவிட்டு வீட்டிற்கு அப்பதுல்லாபுரம் அருகே வரும்போது அவரை வழி மடக்கி யாரோ அவரை வெட்டியதாகவும் ரத்த காயத்துடன் காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றதாக கேள்விபட்டு அங்கு சென்று பார்த்ததாகவும் மேல் சிகிச்சைக்காக அவரை சென்னை அப்போலோ மருத்துவமனைக்கு

தனியார் ஆம்புலென்சு டிஎன்.**01** ஆர்**4115** என்ற ஆம்புலென்சில் நானும் கிருஷ்ணன் அவரது அண்ணன் பெருமாள் மச்சான் குமார் மாமியார் அலமேலு அந்த வேன் ஓட்டுநர் சக்திவேல் எங்களை ஏற்றிக்கொண்டு சென்னையை நோக்கி செல்லும்போது காஞ்சிபுரம் புதிய ரயில் நிலையம் அருகே எங்கள் வேனுக்கு முன்னால் நம்பர் பிளேட் இல்லாத ஒரு குவாளிஸ் காரும் ஒரு ஆட்டோவும் அதிலிருந்து சில நபர்கள் இறங்கி வந்து வேனை அடித்து நொறுக்கியும் கத்தியால் கிருட்டிணை பார்த்து எங்கள் அண்ணன் ஸ்ரிதர் கிட்ட வம்பு வச்சிக்கிட்டா இதே கதிதான் என்று ஒழிந்துபோங்கடா என்று வெட்டினார்கள் என்று போலிசார் வாக்குமூலத்தில் சொல்லி தற்போது குற்றவாளிகளுக்கு பயந்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

**SC NO.9/2013 Date:24.01.2025**

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் ), காஞ்சிபுரம் (பக்கம் )

சாட்சியாகிய திரு.கோதண்டம் என்ற **Pw7** நபரின் வாக்குமூலம் (**1876**ம் ஆண்டின் **10** விதியின் **Tr.A.Pachaiyappan,** இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம்

செய்யப்படுகிறது.

பெயர் - திரு. கோதண்டம்

த/பெ, - திரு. மணி

.வயது - **58**

தொழில் - வழக்கறிஞர் எழுத்தர்

முதல் விசாரணை:

நான் காஞ்சிபுரம் நகரம் பல்லவர் மேடு எண்.**13** என்ற விலாசத்தில் வசித்து வருகிறேன் வழக்கறிஞர் எழுத்தாளராக வேலை செய்கிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி நீதிமன்ற அனுமதியுடன் மீண்டும் அரசு தரப்பு குறுக்குவிசாரணை )

கடந்த **15.8.2009** நானும் என்னுடன் ரியலஸ்டேட் தொழில் செய்து வரும் செல்வம் என்பவரும் காஞ்சிபுரத்திலிருந்து ஓச்சேரி செல்வதற்காக பகல் **1** மணிக்கு சிறுகாவேரிபாக்கம் ஜேஜே நகர் சிவில் சப்ளை உடன் அருகில் சென்றபோது எதிரி பாஸ்கர், எதிரி குமார் என்ற வெள்ளை குமார் ஆகிய இருவரையும் காஞ்சி தாலுகா குற்ற எண்.**809/2009** பிரிவு **147,148,341,294**பி,**324,307** இதச உட்பிரிவு **3,4** டிஎன்பிபிடிஎல் வழக்கில் சம்பந்தபட்ட

எதிரிகள் என்றும் அவர்களிடம் எவ்வித துண்புறுத்தலுமின்றி காஞ்சி தாலுகா போலிசார் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார்கள் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் செல்வம் என்பவரும் சாட்சி கையொப்பம் போட்டுவிட்டும் எதிரிகள் பாஸ்கர் மற்றும் வெள்ளை குமார் ஆகிய இருவரும் குடோன் பின்புறம் மறைத்து வைத்திருந்த இரும்பு கத்தியை மதியம் **2.30** மணிக்கு கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து சாட்சி கையொப்பம் நானும் செல்வமும் போட்டுவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய்சட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**